

சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலம் வார்டு 35, 37 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு திரு.வி.க.ரோடு செங்குந்தர் திருமண மண்டபத்தில் 18.09.2025 அன்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் வழங்கிய மனுவின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி ஆகியோர் வழங்கினார்கள்.



நீலகிரி மாவட்டம், உதகை அண்ணா வியைாட்டு அரங்கத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் நடைபெற்ற, முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 1691 வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் பாராட்டு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார். உடன் மாவட்ட இளைஞர் மற்றும் விளையாட்டு நல அலுவலர் திருமதி இந்திரா, உதகை நகர்மன்ற தலைவர் திருமதி வாணீஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

## தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# 53 இடங்களில் முப்பெரும் விழா பொதுக்கூட்டங்கள்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் செப்.22-

தஞ்சை வடக்கு மாவட்டத்தில் கழக முப்பெரும் விழா பொதுக்கூட்டங்கள் மாவட்டம் முழுவதும் 53 இடங்களில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆணைக்கினங்க கழக முப்பெரும் விழாவை கொண்டாடும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்டத்தில் 53 இடங்களில் கழக முன்னனி நிர்வாகிகள், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களை ஒருங்கிணைத்து பொதுக் கூட்டங்கள் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

27.09.25 அன்று கும்பகோணம் மாநகரிலும், 28.09.25 அன்று கும்பகோணம் மேற்கு ஒன்றியத்திலும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிக் கொண்டான் ஆகியோரும், 29.09.25 அன்று திருவிடைமருதூர் பேரூரில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், 30.09.25 அன்று கும்பகோணம் கிழக்கு ஒன்றியத்தில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், 01.10.25 அன்று திருவிடைமருர் வடக்கு ஒன்றியத்தில் தூத்துக்குடி சரத் பாலா, மற்றும் அம்மாபேட்டை வடக்கு ஒன்றியத்தில் ஆடுதுறை மு.உத்திராபதி, 02.10.25 அன்று சோழபுரம் பேரூரில் இறையன்பு குத்தூஸ், சேலம் சுஜாதா, மற்றும் திருப்பனந்தாள் பேரூரில் ஆலந்துார் ஒப்பிலாமணி, 03.10.25 அன்று திருவிடைமருதூர் தெற்கு ஒன்றியத்தில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, மற்றும் பாபநாசம் தெற்கு ஒன்றியத்தில் சைதை சாதிக் மற்றும் பாடகர் நாகூர் ஜக்கிரியா, 04.10.25 அன்று அம்மாபேட்டை தெற்கு ஒன்றியத்தில் பொன்னேரி சிவா, குடந்தை ரமேஷ், மற்றும் கும்பகோணம் மாநகர் பகுதி1 கம்பம் பெ.செல்வேந்திரன், 05.10.25 அன்று வேப்பத்தூர் பேரூரில் கம்பம் பெ.செல்வேந்திரன், 06.10.25 அன்று கும்பகோணம் மத்திய ஒன்றியத்தில் புதுகை பூபாலன் குழுவினர், 07.10.25 அன்று மெலட்டூர் பேரூரில் புதுகை பூபாலன் குழுவினர், 08.10.25 அன்று திருபுவனம் பேரில் பெறுநற்கிள்ளி, சுவாமிமலை பேரூரில் ஆடுதுறை மு.உத்திராபதி, 09.10.25 அன்று பாபநாசம் பேரூரில் பசும்பொன் ரவிச்சந்திரன், திருப்பனந்தாள் மத்திய ஒன்றியத்தில் ஆடுதுறை மு.உத்திராபதி, 10.10.25 அன்று அய்யம்பேட்டை பேரூரில் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ, 11.10.25 அன்று கும்பகோணம் மாநகர் பகுதி3ல் கந்திலி கரிகாலன், திருவிடைமருதூர் மேற்கு ஒன்றியத்தில் அத்திப்பட்டு சாம்ராஜ், 12.10.25 அன்று மாணவர் அணி சார்பில் சி.வி.எம். பி.எழிழரசன் எம்.எல்.ஏ, ஷேக் அலிமாஷ் அலி, 13.10.25 திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியத்தில் ஆடுதுறை மு.உத்திராபதி, 14.10.25 அன்று பொறியாளர் அணி சார்பில் தாயகம் கவி எம்.எல்.ஏ, இளைஞர் அணி சார்பில் முனைவர் சபாபதி மோகன், ரா.சிந்து நதி, 15.10.25 திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியத்தில் பவானி கண்ணன், அயலக அணி - ஆடுதுறை மு. உத்திராபதி, கும்பகோணம் மாநகர் பகுதி 2ல் கரூர் முரளி, 16.10.25 அன்று பொதுக்குழு உறுப்பினர் ரேவதி நடராஜன் ஏற்பாட்டில் செந்தில் வேல், முரசொலி மூர்த்தி, 24.10.25 அன்று பாபநாசம் வடக்கு ஒன்றியத்தில் தாயகம் கவி எம்.எல்.ஏ, 25.10.25 அன்று திருநாகேஷ்வரம் பேரூரில் கடலூர் இள.புகழேந்தி, 26.10.25 அன்று திருப்ப னந்தாள் மேற்கில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், அம்மாபேட்டை பேரூரில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ, 27.10.25 அன்று ஆதிதிராவிடர் அணி சார்பில் ஆரணி மாலா, விஜயலெட்சுமி, 28.10.25 அன்று தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் பொன்னேரி சிவா மற்றும் ராஜராஜேஸ்வரி, 30.10.25 அன்று அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி - போடி காராஜ், த.குமரவேல், 01.11.25 அன்று இலக்கிய அணி சார்பில் ஈரோடு இளைய கோபால், அருண்குமார், 02.11.25 கலை, இலக்கிய பகுத்திறு பேரவை - கரூர் முரளி, பாலகணபதி, 03.11.25 சிறுபாண்மை அணி - சைதா சாதிக், ஆடுதுறை பேரூரில் கந்திலி கரிகாலன், 04.11.25 அன்று கும்பகோணம் மாநகர் பகுதி 4ல் ஆரூர் மணிவண்ணன், தொழிலாளர் அணி - வரகூர் காமராஜ், வி.பூர்ணிமா, 05.11.25 அன்று விளையாட்டு மேம்பாட்டு அணி - பசும்பொன் இரவிச்சந்திரன், பாவை பூர்ணிமா, 06.11.25 அன்று மகளிர் அணி - சி.வி.எம்.பி.எழிழரசன் எம்.எல்.ஏ, ப.வெங்கடேஷ், 07.11.25 அன்று விவசாய தொழிலாளர் அணி - பசும்பொன் இரவிச்சந்திரன், குடந்தை ராமகிருஷ்ணன், 08.11.25 அன்று நெசவாளர் அணி - தக்கோலம் தேவபாலன், கபில்சாய், 09.11.25 விவசாய அணி - நெல்லிக்குப்பம் புகழேந்தி, 10.11.25 மகளிர் தொண்டர் அணி - தா.பழூர் இளஞ்செழியன், ஆ.தின்ஷா நூஃப், 11.11.25 அன்று மீனவர் அணி ஆடுதுறை மு.உத்திராபதி, வா.ராஜேஸ்வரி, 12.11.25 வர்த்தகர் அணி கவிச்சுடர் கவிதை பித்தன், வியாணி விஸ்வா, வழக்கறிஞர் அணி - குத்தாலம் க. அன்பழகன், ஆர்.ரகுநாத், 14.11.25 அன்று சுற்றுச்சூழல் அணி - சேலம் சுஜாதா, குடந்தை பாஸ்கர், ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

அதுசமயம் மேற்கண்ட பொதுக்கூட்டங்களில் முன்னாள் - இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், வட்ட மற்றும் கிளைச் செயலாளர்கள், கழக பிரதிநிதிகள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: மேற்கண்ட பொதுக்கூட்டங்களை நடத்தும் பொறுப்பாளர்கள் உரிய ஏற்பாடுகளை முன்னதாக செய்து சிறப்பாக நடத்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## மாணவரணி அறிமுக –ஆலோசனைக் கூட்டம்! மாவட்டம் முழுவதும்

# மாணவர் மன்றம் அமைத்து அணியை பலப்படுத்துவீர்!

### பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்

திருவாரூர்,செப்.22-

திருவாரூர் மாவட்டம் முழுவதும் மாணவர் மன்ற அமைப்புக்களை அமைத்து மாணவர் அணியை மேலும் பலப்படுத்துங்கள் என மாணவரணி புதிய நிர்வாகிகளுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,ஆலோசனைகளை வழங்கி பேசினார்.



திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கும் மாணவரணி புதிய அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களின் அறிமுக ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர் மதி. நெல்சன் மண்டேலா வரவேற்புரை வாசித்து நிகழ்சிகளை தொகுத்து வழங்கினார். நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் சா.பகலவன், துணை அமைப்பாளர்கள் மதி.முத்துக்குமார், ஜே. நூருல் அமீன், வை.யோகபாலன்,சகுந்தலா தேவி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர். நிகழ்வில் தலைமை ஏற்ற மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் மாண வரணி அமைப்பாளர்களாக பொறுப்பேற்கும் அனைவருக்கும் வாழ்த்துக்களை கூறினார்.

மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமது 14வயதில் மாணவ நேசன் என்கிற பத்திரிக்கை மூலம் வலுவான மாணவ மன்றத்தை உருவாக்கித்தான் புகழின் உச்சிக்கு சென்றார். அதேபோல மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொரு ஊரிலும் மாணவர் மன்றங்களை அமைக்கவேண்டும். அப்படி அமைத்து மாணவரணியை மேலும் மேம்படுத்தி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கவேண்டும் என்று கூறினார்.

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலையில்

# கரூரில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ - மாபெரும் பொதுக்கூட்டம்!

### திருச்சி என்.சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார்!

கரூர், செப்.22-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட திமுக சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ மற்றும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பிரம்மாண்ட பொதுக்கூட்டம் கரூர் 80அடி சாலையில் நடைபெற்றது. கரூர் மாவட்ட அவை தலைவர் டி. ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

கழக துணைப் பொதுச் செயலாளர், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி என்.சிவா எம்பி, கரூர் மாவட்ட கழக செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினர். இவர்கள் முன்னிலையில் கூட்டத்தில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான கழகத்தினர் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

எம்.எல்.ஏ.க்கள் பிஆர். இளங்கோ, க.சிவகமசுந்தரி, இரா. மாணிக்கம், பரணி கே.மணி, முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயகுமார், மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், கரூர் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எம்எஸ்கே கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என்.செல்வராஜ், பகுதி கழக செயலாளர்கள் க. சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர்எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாசு, விஜிஎஸ். குமார், எம்.பாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் இ.ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம். ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என் மணிகண்டன், த. கார்த்திக், சி.வளர்மதி, பி முத்துக்குமாரசாமி, வி.கே. வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், புகழூர் நகர செயலாளர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் வாசிம் ராஜா,

பொதுக்குழு உறுப்பினர்கள் என்எஸ்.ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி. ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே சாமிநாதன், சி.கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ் காளியப்பன், எம்.சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், பேரூர் செயலாளர்கள் கே.அம்மையப்பன், கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி,

அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், ஆர்ஜி சரவணமூர்த்தி, ஜிம் சிவா, நந்தினி தேவி, தாசப்பிரகாஷ், ஏ. சுப்பிர மணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், அருணா பொன்னுசாமி, வி.அருண், பி. மோகனசுப்பு, பழ.அப்பாசாமி, தியாகராஜன், எம். பிரின்சி, சி.நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லசாமி, எஸ். மனோகர், எம்ஆர்எஸ் சுரேஷ், பங்க் சுப்பிரமணி, விஆர் அண்ணா வேலு, வழக்கறிஞர் என். செந்தில் குமார், டிஎம்.பஷீர்அகமது, முன்னாள் எம்எல்ஏக்கள் பி.காமராஜ், எஸ். காமராஜ், மற்றும் இரா.பிரபு, ஆர். ராமசாமி, ஆர்.கந்தசாமி, கா. அன்பரசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கனகராஜ், ராஜா, பாபு, அருண், யுவராஜ், வழக்கறிஞர்கள் இரா. குடியரசு, பி.லட்சுமணன், பிச்சை முத்து, டி. ராஜேஸ்வரி, டி.நீலமேகம், சாகுல் ஹமீது, ரமேஷ், பாலசுப்பிரமணியன்,

மாநகர கழக நிர்வாகிகள் கேவி.தங்கவேல், கேஎஸ்.அறிவின்ஸ், எம் நிஷா, அங்கு நா.பசுபதி, ஆர்.வெங்கடேஷ், கேஎம். பாலகிருஷ்ணன், பி.சண்முகம், கேஆர்.சுந்தர்ராஜன் ஏ.ஆரோக்கிய ஜெயபால், பி.பழனிவேல், ஜி.ஜீவரத்தினம், பி. சுப்பிரமணி, அக. இளமுருகு மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர். ஜோதிபாசு நன்றி கூறினார். கரூர் மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



சமூக நீதி மறுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலராக திகழ்ந்த பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147 வது பிறந்த நாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, இனிப்புகள் வழங்கினார் பின்னர் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன் , நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி ஒன்றிய செயலாளர் சரவணன், மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன், இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம் பெரியகோட்டை ஊராட்சி பகுதியில் நடைபெற்ற ”ஓரணியில் தமிழ்நாடு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில் மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் தலைமை கழக, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம் அவிநாசி நகர தி.மு.க சார்பில் அவிநாசி மேற்கு ரத வீதியில் ”ஓரணியில் தமிழ்நாடு விளக்க பொதுக்கூட்டம் மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நகர கழக செயலாளர் திராவிடன் வ.வசந்தகுமார் முன்னிலையில், அவைத்தலைவர் அ.ராயப்பன், நகர்மன்ற தலைவர், மாவட்ட மகளிர் அணி தலைவர் தனலட்சுமி பொன்னுச்சாமி வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இதில் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், கழக மருத்துவர் அணி துணை செயலாளர், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கோகுல் கிருபா சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.